தமிழ்நாடு அரசு

சுருக்கம்

ஓய்வூதியம் - நகராட்சிப் பணியாளர்கள் - ஓய்வூதியப் பயன்களுக்கு பணிக்காலத்தை பணியில் சேர்ந்த நாள்முதல் கணக்கிட பிறப்பித்த ஆணை - 14.1.70 முதல் அமுல்படுத்த - ஆணை வெளியிடப்படுகிறது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(நப.3)துறை

அரசாணை(நிலை)எண். 208 நாள்:14.8.1997.

படிக்கப்பட்டது:

1) 16.6.83 நாளிட்ட ஊ.வ.உ.துறை அரசாணை (நிலை) எண்.863.
2) 16.3.90 நாளிட்ட ஊ.வ.உ.துறை அரசாணை (நிலை)எண்.210
3) நகராட்சி நிர்வாக ஆணையர் மூ.மு.எண்.31405/92/டி3 நாள் 27.4.92.
4) உள்ளாட்சி நிதிக் கணக்குகள் ஆராய்வாளர் ந.க.எண். பிலி1/44748/92 நாள் 20.8.92.
5) நகராட்சி நிர்வாக ஆணையர் ந.க.எண்.74215/95/டி3 நாள் 14.11.95.

...

ஆணை:

தமிழ்நாடு நகராட்சிப் பணி ஓய்வூதிய விதிகள்,1970ன் விதி 6-ன்படி, ஓய்வூதியப்பயன்களுக்கு, நகராட்சிப் பணியாளர்களின் பணிக்காலத்தை, அவர்கள் சேமநலநிதியில்(நகராட்சி)சேர்ந்த நாள் முதல் கணக்கிடப்படவேண்டும். ஆனால், 16.6.83 நாளிட்ட ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை(நிலை) எண்.863-ல் நகராட்சிப் பணியாளர்கள், அவர்கள் பணியில் சேர்ந்த நாள்முதல் சேமநலநிதியில் சேர்ந்த நாள்வரை சேமநலநிதி பங்குத்தொகையை நகராட்சிக்கு செலுத்தவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, முறையான பணியில் சேர்ந்த நாள் முதல் அவர்களுடைய பணிக்காலத்தை கணக்கிட்டு ஓய்வூதியம் அளிக்க ஆணையிடப் பட்டது. இந்த அரசாணை 16.6.83-க்கு பின்னர் ஓய்வுபெற்றவர்களுக்குத்தான் பொருந்தும். இதேபோன்று, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கு பணியில் சேர்ந்த நாள்முதல் பணிக்காலத்தை கணக்கிட்டு ஓய்வூதியம் அளிக்கலாம் என 17.2.84 நாளிட்ட ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை (நிலை)எண்.234-ல் ஆணை வெளியிடப்பட்டது. பின்னர், இந்த ஆணை ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் அமுல் படுத்திய நாளான 1.4.74 முதல் வழங்க 16.3.90 நாளிட்ட ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண்.210-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கு வழங்கியதுபோன்று, இந்தச் சலுகையை நகராட்சிப் பணியாளர்களுக்கும் ஓய்வூதியத் திட்டம் அமுல்படுத்திய நாளான 14.1.70 முதல் அமுல் படுத்த தமிழக ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. இக்கோரிக்கையை நகராட்சி நிர்வாக இயக்குநரும் பரிந்துரைத்துள்ளார்.

2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையை ஏற்று, நகராட்சிப் பணியாளர்களுக்கு முறையான பணியில் சேர்ந்த நாள்முதல் பணிக்காலத்தை ஓய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக்கொள்ள 16.6.83 நாளிட்ட அரசாணை (நிலை)எண்.863-ல் பிறப்பித்த ஆணையை, 14.1.70 முதல் அமுலாக்க அரசு ஆணையிடுகிறது.

த.பி.பா.

3. நகராட்சி பணி ஓய்வூதிய விதிகளுக்குத் தேவையான வரைவு திருத்தங்களை அனுப்பிவைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. இந்த அரசாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் அதன் அ.சா.எண். 171/நி.செ.(எல்.எஸ்.ஆர்.)/97 நாள் 3.7.97-ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். மாலதி
அரசுச் செயலாளர்.

பெறுநர்:

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை-108
அனைத்து நகராட்சி ஆணையாளர்கள்.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.

நகல்:

நிதித்துறை, சென்னை-9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(பொது)துறை, சென்னை-9
முதலமைச்சரின் தனிச் செயலர், சென்னை-9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

ஆ. அண்ணாமலை
பிரிவு அலுவலர். 14/8/97

14/8/97